மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No.178/2022**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் தேதி திங்கள்கிழமை

வா.சா.1 (மகாதேவி)

கு.வி (பிரதிவாதி தரப்பில்)

நான் விவசாய வேலை செய்துவருகிறேன். எனது கணவர் தபால் அலுவலகத்தில் தபால்காரராக பணிபுரிகிறார். பிரதிவாதி பெயர் ரவிச்சந்திரன். பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் செல்வம் வாத்தியார் மூலம் எனக்கு பிரதிவாதியை தெரியும். நேரடியாக பிரதிவாதியை தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எவ்வளவு ரூபாய் கடன் கொடுத்தேன் என்றால் ரூ.1,00,000/- கொடுத்தேன். எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் 20.08.2018 அன்று கொடுத்தேன். ஆயிரம் ரூபாய் கட்டுக்களாக கொடுத்தீர்களா என்றால் 500 ரூபாயில் 2 கட்டுக்கள் கொடுத்தேன். தொகையை எங்குவைத்து கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். புரோநோட்டு நான் வாங்கி வைத்திருந்தேனா என்றால் நான் வாங்கி வைத்திருந்தேன். புரோநோட்டுக்களை யார் பூர்த்தி செய்தார் என்றால் எனது வீட்டு பக்கத்து வீட்டில் குடியிருக்கும் செல்லம் தான் எழுதினார். நான் கடன் கொடுக்கும்பொழுது செல்வம் வாத்தியார், வேல்முருகன் ஆகியோர் உடனிருந்தனர். எவ்வளவு ரூபாய் வட்டிக்கு கொடுத்தேன் என்றால் 100க்கு 2 பைசா என்றவீதத்தில் கொடுத்தேன். பிரதிவாதி எத்தனை மாதங்கள் வட்டி கொடுத்தார் என்றால் எனக்கு வட்டி எதுவும் பிரதிவாதி கொடுக்கவில்லை. எனக்கு ஒரு லட்சம் பணம் எவ்வாறு கிடைத்தது என்றால் எனது கணவர் எனக்கு வீட்டுசெலவுக்க கொடுத்த பணத்தை சேர்த்துவைத்திருந்தேன். பிரதிவாதி தவிர வேறு யாருக்கும் கடன் கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன், பெயர் தற்பொழுது ஞாபகம் இல்லை. பிரதிவாதி 3 வருடங்களாக வட்டி கொடுக்காததற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் பிரதிவாதி கடனை திருப்பி தராததால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். எப்பொழுது வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. அறிவிப்பு அனுப்பிய பிறகும் பிரதிவாதி பணம் செலுத்தினாரா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு என்னை நேரில் சந்தித்து பணம் விரைவில் தருவதாக கூறினார். பிரதிவாதி 05.04.2021 தேதி ரூ.1,00,000/-க்கு வட்டி ரூ.72,000/- சேர்த்து ரூ.1,72,000/-க்கு இரண்டாவது புரோநோட்டு எழுதிக்கொடுத்தார். பிரதிவாதி எந்த தேதியில் என்னை எங்கு சந்தித்தார் என்றால் பிரதிவாதி கடந்த 05.04.2021ம் தேதி எனது வீட்டிற்கு வந்து என்னை சந்தித்தார். அப்பொழது தான் 2வது புரோநோட்டு

எழுதிக்கொடுத்தார். 2வது புரோநோட்டு எழுதிக்கொடுக்கும்பொழுது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் முத்து மற்றும் செல்லம் ஆகியோர் உடனிருந்தார்கள். 2வது புரோநோட்டை பிரதிவாதி ரவிச்சந்திரன் வாங்கிவந்தாரா என்றால் இல்லை. நான் வீட்டில் வைத்திருந்த புரோநோட்டில் தான் எழுதி வாங்கினேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் கடந்த 04.11.2022ம் தேதி கல்வித்துறை அமைச்சர், பள்ளி கல்வித்துறை ஆணையர், பள்ளி கல்வித்துறை செயலாளர், சிவகங்கை மாவட்ட தொடக்க கல்வி அலுவலர், திருப்பவனம் வட்டார கல்வி அலுவலர் மற்றும் பிரதிவாதி வேலை செய்யும் மழவராயநேந்தல் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆகியோர்களுக்கு புகார் மனு அனுப்பினேனா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது தான். ஆனால் அந்த புகார் மனுவை எனது கணவர் அனுப்பியிருப்பார். (தற்போது சாட்சி எனக்கு ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார்) மேற்படி புகார் மனுவில் பிரதிவாதி ரவிச்சந்திரன் ரூ.1,50,000/- கடன் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் எதுவும் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். அந்த புகாரை எனது கணவர் எழுதி நான் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் விசாரணைக்கு எனது கணவர் வந்திருந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. 04.11.2022ம் தேதிய புகார் மனுவை எனது கணவர் தான் தயார் செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி என்னிடம் எப்பொழுது ரூ.1,72,000/- தருவதாக கூறினார் என்றால் 2வது புரோநோட்டு எழுதிக்கொடுத்த இரண்டு மாத காலத்திற்குள் மேற்படி தொகையை தருவதாக கூறினார். பின்னர் பிரதிவாதி கூறியதுபோல் தரவில்லை. நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பிரதிவாதி எவ்வளவு தொகை கடன் வாங்கினார், புரோநோட்டுக்களை யார் எழுதியது என்ற விபரம் செல்வம் ஆசிரியரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். அவரை விசாரிக்க தயாராக இருக்கிறேன். இரண்டு புரோநோட்டையும் கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் எனது கணவரிடம் தான் கேட்கவேண்டும். எனது கணவரை இவ்வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் அவர் வேலைக்கு செல்வதால் அவரை சாட்சியாக விசாரிக்க முடியாது. இரண்டு புரோநோட்டுக்களிலும் எனது கணவர் ஏன் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் செல்வம் வாத்தியார் நன்கு தெரிந்தவர் என்பதால் அவர் சொன்னதன் பேரில் எனது கணவரை கையொப்பம் போட சொல்லவில்லை. பிரதிவாதி ரவிச்சந்திரன் 20.08.2018ம் தேதி திருப்புவனம் நீதிமன்றத்திற்கு எதிரே உள்ள ஆலமரத்தடியில் வைத்து ரூ.1,00,000/- கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல, வீட்டில் வைத்து தான் வாங்கினார். அந்த கடன் தொகைக்கு மாதம்

ஒன்றிற்கு 3 ரூபாய் வட்டி வீதம் மாதம், மாதம் வட்டித்தொகையை **G Pay** மூலமாக செலுத்திவந்தார் என்றால் சரியல்ல. கடந்த 2021ம் வருடம் பிரதிவாதி கடன் தொகை முழுவதையும் திருப்புவனம் நீதிமன்றத்திற்கு எதிரே உள்ள ஆலமரத்தடியில் வைத்து ரூ.1,00,000/- கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அசல் தொகையை செலுத்தும்பொழுது இரண்டு மாத வட்டி தொகை ரூ.6,000/- செலுத்திவிட்டு 20.08.2018ம் தேதிய புரோநோட்டை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படி எனது கணவர் சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. அதை நம்பி பிரதிவாதி 20.08.2018ம் தேதிய புரோநோட்டை திரும்ப வாங்கவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு 01.03.2021ம் தேதி வழக்கறிஞர் மூலமாகஅறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதி என்னிடம் ரூ.6000/- செலுத்திவிட்டு புரோநோட்டை கேட்டார் என்றும் ஆனால் வழக்கறிஞர் கட்டணம் 15,000/- உள்ளதாகவும் அதையும் சேர்த்து கொடுத்தால் தான் புரோநோட்டை தருவேன் என்று எனது கணவர் சொன்னார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரவிச்சந்திரன் என்னிடம் நேரடியாக கடன்பெறவில்லை என்றும் எனது கணவரிடம் தான் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது கணவர் அரசு வேலையில் இருப்பதால் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்பதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 20.08.2018ம் தேதிய புரோநோட்டு 3 வருடங்கள் முடிந்துவிட்டதால் 05.04.2021ம் தேதிய புரோநோட்டை நானும் எனது கணவரும் உற்பத்தி செய்து பிரதிவாதியிடம் பணம் பறிக்கும் கெட்ட எண்ணத்தில் இநத வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு எந்த கடனோ, வட்டியோ கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. எனவே பிராதுப்படி எனக்கு எந்த பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை